**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIF Impact Factor 3.5| Multidisciplinary
DOI: https://doi.org/10.63300/kijts05sp062026.02
https://ngmtamil.in/

# Periyar's Rationalist Thoughts

**K.Vasuki[1*], Dr. V.Amudha[2],**
[1]Registration No: BDU2010632778614 Ref No: BDU/PhD/20/01445442 Full-time PhD Research Scholar, Department of Tamil, Kunthavai Naacchiyaar Government Arts College for Women (Autonomous), Affiliated to Bharathidasan University, Thanjavur – 7, Tamil Nadu, India.
[2]Research Supervisor, Assistant Professor, Department of Tamil, Kunthavai Naacchiyaar Government Arts College for Women (Autonomous), Affiliated to Bharathidasan University, Thanjavur – 7, Tamil Nadu, India.
[*]Corresponding Author EMail: vasumuthu75@gmail.com | Mobile: 9600844832.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

**Abstract:**
Periyar is a visionary who awakened society globally through his rationalist thoughts. This study aims to analyze the trajectory of rational thought in literature across various eras and compare the rationalist perspectives of scholars preceding Periyar with his own, highlighting the unique distinctiveness of his ideology.
By exploring core themes—including the resolutions of the First Self-Respect Conference, perspectives on caste, oppression in the education system, economics, communism, the dynamics between labor and capital, and the disparity between the rich and the poor—this research elucidates the unique features of Periyar's rationalist philosophy.

***KEYWORDS:*** *Rationalism, Communism, Renaissance, Cultural Revolution, Untouchability, Superstition, Thought, Self-Respect Movement.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள்

[1]**கா.வாசுகி,** பதிவு எண் : BDU2010632778614, பார்வை எண் : BDU/PhD/20/01445442,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (த),
பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது, தஞ்சாவூர் – 7.
தமிழ்நாடு, இந்தியா, செல் : 9600844832.

[2]**முனைவர் வெ.அமுதா,** ஆய்வு நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (த), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது,
தஞ்சாவூர் – 7. தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

உலக அளவில் தம் பகுத்தறிவு சிந்தனைகளால் சிந்திக்கவைத்து மக்களை விழிப்படையச் செய்தவர் பெரியார். காலந்தோறும் வெளிவந்துள்ள இலக்கியங்களில் பகுத்தறிவு சிந்தனை எவ்வாறு இருந்தது, பெரியாருக்கு முன்பு இருந்த சான்றோர்களின் பகுத்தறிவு சிந்தனை எவ்வாறு இருந்தது. பெரியாரின் பகுத்தறிவு சிந்தனை மற்றவர்களுடைய சிந்தனையிலிருந்து எவ்வாறு தனித்துவம் பெற்றுள்ளது என்பன போன்ற கருத்துக்கள் ஆராயப்படவேண்டும். முதல் சுயமரியாதை மாநாட்டு தீர்மானங்கள் பற்றிய சிந்தனை, சாதிய சிந்தனை, கல்வியில் ஒடுக்குமுறை பற்றிய சிந்தனை, பெரியாரும் பொருளியலும் பற்றிய சிந்தனை, பொதுவுடைமை பற்றிய சிந்தனை தொழிலாளி, முதலாளி பற்றிய சிந்தனை ஏழைப்பணக்காரன் பற்றியசி ந்தனை போன்றவற்றை இனம்கண்டு அவற்றின் வாயிலாக பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைகளின் தனித்தன்மைகளை எடுத்துரைப்பதாக இவ்ஆய்வு அமைகிறது.

**கருவிச்சொற்கள்**

பகுத்தறிவு – பொதுவுடைமை – மறுமலர்ச்சியையும் – பண்படு புரட்சி – தீண்டாமை மூடநம்பிக்கை – சிந்தனை சுயமரியாதை இயக்கம்.

**முன்னுரை**

பெரியார் பெண்களின் சமயவிடுதலையை முதன்மைப்படுத்துகிறார். நாட்டு மக்களுடைய கடவுள் நம்பிக்கை சமயப்பற்று மூடப்பழக்க வழக்கங்கள் ஆகியவைகளுக்கு பகுத்தறிவின்மையே காரணம் என்று பெரியார் கருதினார். மக்களைப் பகுத்தறிவாளர்களாக மாற்றினால் எல்லா வகையான தீமைகளும் நீங்கிவிடும் என்று கருதிப் பெரியார் பகுத்தறிவினைப்பரப்பினார். பெரியாரைப் போலத் தனியொருவராக நின்று தமிழ்நாட்டில் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பியவர்கள் வேறு ஒருவரும் இல்லை. பெரியார் அவர்களின் சுற்றுப் பணயம் இதனை உறுதிப்படுத்துகிறது. பெரியார் தனக்கு முன்மாதிரி இல்லாத சுயசிந்தனையாளர்,

மூடநம்பிக்கைகளின் மூலவேர்களைக் கண்டறிந்து களைவதில் அடங்காத ஆர்வம் உடையவர். நாட்டு மக்களின் நன்மைகளுக்கு கடவுளும், மதமும் குறுக்கே இல்லையானால் கடவுளைப்பற்றிய செய்திகளில் தாம் ஈடுபடவேண்டியிருக்காது என்று பெரியார் உரைத்தார். நாட்டில் நாத்திகத்தைப் பரப்ப பெரியார் முயலவில்லை. மக்களின் பொது நன்மைக்குத் தடையாக இருப்பதாகக் கருதியே கடவுள் சமயம் போன்றவற்றை மறுப்பதில் அவர் ஆர்வம் காட்டினார். மேற்கு நாட்டுப் பகுத்தறிவாளர்களைப் பெரியார் பின்பற்றவில்லை மக்களிடையே பகுத்தறிவுக் கொள்கைகலைப் பரப்பமுயன்றார். பகுத்தறிவு வளர்ச்சிக்காகக் கிளர்ச்சிகளைப் பெரியார் மேற்கொண்டார். பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் புதியன – அவற்றைப் பரப்ப அவர் மேற்கொண்ட வழிகளும் புதியன எப்படிப்பட்ட செய்தியானாலும் ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்கும் விழிப்புணர்ச்சியைப் பெரியாரின் பகுத்தறிவியக்கம் உண்டாக்கியது. அவர்தம் பகுத்தறிவுச் சிந்தனைகளை ஆராய்வதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

**பகுத்தறிவு விளக்கம்**

பகுத்தறிவு என்பது மனிதன் எதையும் காரணம் ஆதாரம் அனுபவம் தர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்து உண்மையை அறியும் சிந்தனை முறையாகும். இது கண்முடித்தனமான நம்பிக்கைகளை ஏற்காமல், “ஏன்” எப்படி என்ற கேள்விகளின் மூலம் உண்மையைத் தேடும் அறிவியல் மனப்பாங்காகும். பகுத்தறிவு சிந்தனை மனிதனை மூடநம்பிக்கையிலிருந்து விடுவித்து. சரி தவறுகளை தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. மேலும் இது சமூகத்தில் சமத்துவம் நியாயம் மனிதநேயம் ஆகியவற்றை வளர்க்கும் அடிப்படை எண்ணமாகும். ஒரு விஷயத்தை பார்த்து சிந்தித்து காரணம் கண்டுபிடித்தது சரி தவறு என முடிவு செய்வது பகுத்தறிவு ஆகும்.

**பகுத்தறிவு என்பதற்கு**

பகுத்தறிவு வேறு அறிவு வேறு என்பதாகக் விடை கிடையாது அறிவு என்றாலே பகுத்தறிவு என்றுதான் பொருள் சுய அறிவு சார்ந்து இயங்குவது மக்கள் அனைவரும் ஒரே நிலையினர் அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு இல்லை சாதி தொழில் போன்றவற்றால் மக்களுக்குள் ஏற்படும் வேறுபாடுகளைக் களையவேண்டும் என்ற நோக்கில் சிந்திப்பதே பகுத்தறிவாகும். பகுத்தறிவாளர்கள் மூடநம்பிக்கைகளைத் தவிர்த்து தர்க்க ரீதியான கருத்துக்களை ஏற்பர். ஆதாரப் பூர்வமான ஆய்வு காட்சிகளைக் கண்டு காரணங்களை ஆராய்ந்து முடிவுகளை முன் வைத்து வகைப்படுத்துதல், நன்மை, தீமை மற்றும் நிஜமான நிகழ்வுகளைப் பிரித்தறிய அறிவியல் கண்ணோட்டத்துடன் சமூகத்தைச் சீரமைக்கப்பகுத்தறிவு அவசியமாகும்.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026 

**காலந்தோறும் வெளிவந்துள்ள இலக்கியங்களில் பகுத்தறிவு சிந்தனைகள்**

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொருத்தவரை காலந்தோறும் வெளிவந்த இலக்கியங்களில் பகுத்தறிவு சிந்தனை பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் மனித வாழ்க்கை இயற்கை, வீர வாழ்க்கை போன்றவை கடவுள் அல்லது நம்பிக்கையை விட மனித அனுபவத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறை தீர்க்க சிந்தனைக்கு வழிவகுத்தது. ஆனால் இடைக்காலத்தில் மதச் சிந்தனைகள் மேலோக்கியதால் பகுத்தறிவு ஒரு அளவிற்கு மறைந்தது. இதன் விளைவாக பகுத்தறிவு சிந்தனை முழுமையான சமூக இயக்கமாக உருவாகாமல் தத்துவ நிலைகளில் மட்டுமே நிலைத்தது. இதனைத் தொடர்ந்து நவீன காலத்தில் சமூக மாற்றத்தேவைகள் அதிகரித்தபோது பகுத்தறிவு சிந்தனை புதிய வடிவில் வெளிப்படத் தொடங்கியது.

**பெரியாருக்கு முன்பு இருந்த சான்றோர்களின் பகுத்தறிவு சிந்தனை**

பெரியாருக்கு ஈ.வே ராமசாமி அவர்களுக்கு முன்பே தமிழ்ச்சான்றோர்கள் பலர் தங்களுடைய இலக்கியங்கள் மற்றும் போதனைகளின் மூலம் பகுத்தறிவு சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களின் பகுத்தறிவு சிந்தனை நேரடியாக மத மறுப்பு அல்லது சமூகப் புரட்சி வடிவில் இல்லாமல் ஒழுக்கம் சமத்துவம் மனித நோயம், கல்வி, சிந்தித்து செயல்படுதல் போன்ற கருத்துகளின் மூலம் வெளிப்பட்டது. திருவள்ளுவர் தனது திருக்குறள் நூலில் மனிதன் எந்த செயலையும் செய்வதற்கு முன் சிந்தித்து செய்ய வேண்டும். ஒழுக்கம் மனிதனை உயர்த்தும், பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. செய்கையால் உயர்வு உண்டு போன்ற கருத்துக்களை கூறுகிறார். இக்கருத்துகள் மனித வாழக்கையை காரணம் மற்றும் ஒழுக்கம் அடிப்படையில் அமைக்கவேண்டும் என்று பகுத்தறிவு சிந்தனையை காட்டுகிறது. தந்தை பெரியாருக்கு முன்பே தமிழகத்தில் பகுத்தறிவு சிந்தனைகளை விதைத்த பல சான்றோர்கள் இருந்துள்ளனர். பெரியாரின் சிந்தனைகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்த சில முக்கிய சான்றோர்களின் பகுத்தறிவு கருத்துக்கள் பெரியார் தனது உரைகளில் அடிக்கடி மேற்கோள் காட்டும் நூல் திருக்குறள் பகுத்தறிவின் அடிப்படையாக வள்ளுவர் கூறியது

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும்**

**அகப்பொருள் மெய்ப்பொருள்**

**காண்பது அறிவு**

ஒரு விசயத்தை யார் சொன்னாலும் எப்போது சொன்னாலும் அதன் உண்மையை ஆராய்ந்து பார்ப்பதே அறிவு.

மூடநம்பிக்கை எதிர்ப்பு சாதி, மதம், குலம் ஆகியவற்றின் பெயரால் மனிதர்களை பிரிப்பதைப் பாசாங்கு என்று சாடினார்.

**“கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் ஒளிக்கு திரை எதற்கு”**

**என வினவி சடங்கு சம்பிரதாயங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்**

**அயோத்திதாசப் பண்டிதர்**

திராவிட இயக்கத்தின் முன்னோடியாகக் கருதப்படும் இவர் பெரியாருக்கு முன்பே சாதி ஒழிப்பு மற்றும் பகுத்தறிவு பிரச்சாரத்தைச் செய்தவர் பகுத்தறிவு இதழில் ஒரு பைசா தமிழன் இதழ்மூலம் சாதி இழிவுகளையும் போலிமத நம்பிக்கைகளையும் அறிவியல் ரீதியாக விமர்சித்தார்.

**சித்தர்கள்**

பதினெண் சித்தர்கள் மற்றும் பிற சித்தர்கள் மதச்சடங்குகளையும் உருவ வழிபாட்டையும் மிகக்கடுமையாக எதிர்த்தனர்.

**சிவவாக்கியார் கோயிலாவது எதடா?**

கோயிலாவது எதடா? குலமாவது எதடா? என்று விளவி உருவ வழிபாட்டை நிராகரித்தார் சாதிப் பாகுபாடுகளைச் சாதிப்பிரிவினையிலே தீயைவைப்போம் என்று சாடியவர்கள் சித்தர்களே.

**வள்ளலார் (ராமலிங்க அடிகளார்)**

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார். சன்மார்க்க நெறியின் மூலம் பகுத்தறிவை முன்வைத்தார் பகுத்தறிவு ஒரு புதிய கருத்தாக இல்லாமல் தொன்மையான ஒரு வடிவமாக இருந்தது. சங்க இலக்கியங்களில் மனித வாழ்வின் இயற்கை நிலை அணுகுமுறை சங்க மருவிய காலத்தில் பிரதிபலிக்கிறது. எனினும் இச்சிந்தனைகள் சமூக மாற்ற இயக்கமாக முழுமையாக வெளிப்படாத நிலையில் இருந்தன. இந்நிலையை மாற்றி, பகுத்தறிவை சமூக மாற்றத்தின் செயல்முறை கருவியாக மாற்றியவர் பெரியார் ஈ.வே.ராமசாமி ஆவார்.

**பெரியாரின் பகுத்தறிவு சிந்தனை மற்றவர்களுடைய சிந்தனையிலிருந்து எவ்வாறு தனித்துவம் பெற்றது**

பெரியார் ஈ.வே.ராமசாமி அவர்களின் பகுத்தறிவு சிந்தனை முன்னர் இருந்த தமிழ் சான்றோர்களின் சிந்தனையைவிட மிகவும் தீவிரமானது சமூக மாற்றத்தை நோக்கியது நேரடி எதிர்ப்பை கொண்டது என்பதில் வேறுபடுகிறது.

முன்னோர் இருந்த சான்றோர்கள் திருவள்ளுவர் அவ்வையார் பாரதியார் போன்றோர் ஒழுக்கம் பற்றி கூறினர் சமத்துவம் பற்றி கூறினர் மனிதநேயம் வலியுறுத்தினர் மூடநம்பிக்கையை மறைமுகமாக விமர்சித்தனர் மதத்தை முழுவதும் மறுக்கவில்லை ஆனால் பெரியார், சாதி முறையை நேரடியாக எதிர்த்தார். மதத்தை விமர்சித்தார் கடவுள் இல்லை என்று கூறினார் பெண்கள் சமத்துவம் வலியுறுத்தினார். சமூக புரட்சியை நோக்கமாக கொண்டார் இதுவே முக்கிய வேறுபாடு.

புத்தர் கூட கடவுளைப் பற்றிக் கவலைப்படாத கடவுள் கோட்பாட்டை இக்னோர் செய்தவர்தான் ஆனால் அவர் மனிதர்களின் வாழ்க்கை இன்னல்கள் நிறைந்தது என்பதை உணர்ந்து கொண்டு

அதற்கு விடிவு தேட முயற்சியும் செய்து அதற்கு ஒரு சொல்யூசனையும் கொடுத்து இருக்கிறார். புத்தர் அதற்காக கடுமையாக உழைத்தார் தன்னுடைய சுகங்களையும் துறந்தார். அதிசங்கார். சாக்ரடீஸ், போன்றவர்களும் அப்படியே சிறந்த பகுத்தறிவு வாதிகளான புத்தர் சாக்ரடீஸ், இயேசு, ஆதிசங்கரர், பட்டினத்தார், விவேகானந்தர் போன்றவர்கள் அதைத்தான் செய்தனர்.

பெரியார் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு முக்கிய சமூக சீர்திருத்தவாதி செயற்பாட்டாளர், சிந்தனையாளர் ஆவார். அவர் சமூகநீதி எதிர்ப்பு மூடநம்பிக்கை எதிர்ப்பு, இறைமறுப்பு பகுத்தறிவு பெண்கள் முன்னேற்றம். கல்வி ஆகியவை சார்ந்து கொண்டிருந்த சிந்தனைகளே பெரியார் கொள்கைகள் அல்லது பெரியார் சிந்தனைகள் என்றழைக்கப்படுகின்றன. இவரின் சமுதாயப் பங்களிப்பைப் பாராட்டி யூனஸ்கோ நிறுவனம் புத்துலக தொலை நோக்காளர் தென்கிழக்காசியாவின் சாக்ரடீஸ், சமூகசீர்திருத்த இயக்கத்தின் தந்தை அறியாமை மூடநம்பிக்கை அர்த்தமற்ற சம்பிரதாயங்கள் மட்டமான பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் கடும் எதிரி என்று பாராட்டுச் சான்றிதழ் வழங்கியுள்ளது. இவருடைய பகுத்தறிவு சுயமரியாதைக் கொள்கைகள் தமிழ்நாட்டின் சமூகப்பரப்பிலும் தமிழக அரசியலிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியவை. தமிழ்நாட்டை பொறுத்தவரையில் பகுத்தறிவு என்கிறவார்த்தையை பிரபலம் ஆக்கியதில் முக்கிய பங்கு வகித்தது பெரியார்தான்.

**சுயமரியாதை மாநாட்டு தீர்மானங்கள் பற்றிய சிந்தனை**

சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாட்டில் இந்தியாவில் அன்றைய கால கட்டத்தில் நிலவிய அரசியல் சிக்கல்களான சைமன் குழு நேருத்திட்டம் ஆகியவற்றுக்கு எதிரான தீர்மானங்களும் சமூகத்தளத்தில் சாதிய ஆதிக்கம் சனாதன மதச் சிந்தனைகள் பண்பாட்டுச் சீரழிவுகள், பார்ப்பனரல்லாதோருக்குக் கல்வி மறுக்கப்பட்ட நிலை, மூடநம்பிக்கைகளுக்கு எதிரான பாடத்திட்டம் கொண்டு வருதல், பெண்களின் சமூக நிலையை மேம்படுத்தல், மக்கள் தொடர்புச் சாதனங்களில் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவுப் பிரச்சாரம் ஆகியவை குறித்த தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 34 தீர்மானங்களுள் முதல் மூன்று இன்றைய சைமன் கமிஷனை ஏற்பது குறித்தனவாக அமைகின்றன. கடைசித்தீர்மானம். சுய மரியாதை இயக்கம் மூலவராகிய தந்தை பெரியாரைப் பாராட்டி நம்பிக்கை தெரிவிக்கின்றது. எஞ்சிய 30 தீர்மானங்களும் கொள்கை விளக்கங்களேயாகும்.

உயர்வு தாழ்வு கற்பிக்கும் மதம், வேதம், சாத்திரம், புராணங்களைப் பின்பற்றக்கூடாது சாதிப் பிரிவினைகள் ஏற்கக்கூடாது பொது இடங்களை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளச் சமஉரிமை அளிக்கப்பட வேண்டும். மக்கள் தங்கள் சாதிப்பட்டங்களைத் துறந்து சமயக் குறிகளைக் கைவிட வேண்டும் பெண்களின் திருமண வயது 16க்கு மேற்பட்டிருக்க வேண்டும். மணம்

புரிந்துகொள்வதிலும் மணவிளக்குப் பெறுவதிலும் ஆண்பெண் இருவருக்கும் உரிமை வேண்டும். விதவைகள் மறு மனத்திற்கு உதவி செய்ய வேண்டும். திருமணம் எளிமையானதாக சடங்குகள் திருத்தப்பட்டு ஒருநாள் விருந்தோடு நடத்தப்பட வேண்டும். கோவில்களில் தரகரும் வடமொழியும் வேண்டாம் கோவில் செத்துக்கள் தொழில், அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். கோவில் விழாக்கள் நிறுத்தப்பட்டு அறிவு வளர்ச்சிக்கேற்ற பொருட்காட்சிகள் நடத்தப்பெற வேண்டும். நூலாசிரியர்கள், கலைஞர்கள் ஆகியோர் சுயமரியாதைக்கு எதிரான மதக்கொள்கைகளைப் பிரசாரம் செய்ய வேண்டாம். சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பத் தொண்டர் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். இக்கொள்கைகளை ஏற்பவர்களையே மக்கள் ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பன மக்களை கேட்டுக் கொள்ளும் தீர்மானங்கள்.

வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வருங்காலத்து அரசியல் திட்ட அமைப்பில் சேர்க்கப்பட வேண்டும் தீண்டாமை. ஒழிப்பு சமஉரிமை வழங்கல் ஆகியவற்றுக்குச் சில சுயநல வகுப்பாரின் மத சம்பந்தமான முட்டுக்கட்டை இருப்பதால் இவற்றுக்காக அரசாங்கச்சட்டம் வேண்டும். தாய்மொழியும் அரசு மொழியும் மட்டுமே கல்வி நிறுவனங்களில் பொதுப்பணத்தில் கற்பிக்கப்படவேண்டும். பெண்குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வி கட்டாயமாக்கப்பட்டுப் பொது நிதியிலிருந்து அதற்கு மட்டுமே செலவழிக்கப்படவேண்டும். உயர்கல்விக்குப் பொது நிதியைப் பயன்படுத்தலாகாது. வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் அங்கே செயல்பட வேண்டும். தீண்டாமைக்கு ஆளான பிள்ளைகளுக்குப் பள்ளிகளில் புத்தகம், உணவு உடை முதலியன இலவசமாக அளிக்கப்படவேண்டும். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு நியாயம் கிடைக்கமலிப்பதால் அதற்காக அரசு ஒரு குழுவை ஏற்படுத்தி விசாரிக்க வேண்டும். அரசு தர்காஸ்து நிலைத்தை தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் நிலமில்லாதவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். மேலும் தீண்டப்படாதார் நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்யப் பண உதவி செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகளில் தீண்டப்படாதாருக்கு முன்னுரை வழங்க வேண்டும். மூடநம்பிக்கைகளுள்ள புத்தகங்களைப் பள்ளிகளிலும். ஆசிரியர். பயிற்சிப் பள்ளிளிலும் பாடமாக வைக்கக்கூடாது பகுத்தறிவு, தன் முயற்சி ஆராய்ச்சி முதலாவைற்றுக்கு ஏற்ற நூல்களையே பரிந்துரைக்க வேண்டும். பெண்களுக்கு ஆன்களைப் போலவே சமமான சொத்துரிமையும் வாரிசு உரிமையும் வழங்கப்படவேண்டும். பெண்கள் எந்தத் தொழிலையும் மேற்கொள்ளச் சமஉரிமை அளிக்கப்படவேண்டும் பள்ளிகளில் பெண்களுக்கு ஆசிரியப் பணியில் அதிக இடம் வழங்கப்படவேண்டும். ஆரம்பக் கல்விக்குப் பெண் ஆசிரியைகளே நியமிக்கப்படவேண்டும். உணவகங்களில் வகுப்பு வேற்றுமை கற்பிக்கப்படுவதைக் கண்டிப்பதுடன் அத்தகைய இடங்களுக்கு அலுவலர்கள் உரிமம் வழங்கக்கூடாது. தொடர்வண்டி நிலையச் சிற்றுண்டிச் சாலைகளில் சாதி, மத,

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026

இன நிற அடிப்படையில் வேற்றுமை பாராட்டலாகாது என்பன அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள்.

சுயமரியாதை இயக்கம் சமூக விடுதலை இயக்கம் என்பதனைச் செயல் அளவில் அமைக்கும் இத்திட்டங்கள் எதிர்வரும் ஆண்டுகளில் பொருளியல் சமனியத்தை கோரும் சில சமவுடைமைச் கொள்கைகளுக்கும் கூட வித்தூன்றின. முதல்நிலையில் அரசியல், ஆட்சி நடைமுறை ஆகியவற்றை அடிப்படையான சமுதாய பகுத்தறிவுக் கொள்கைகளுடன் இணைத்துச் சமஉரிமையை அனைவருக்கும் வழங்கும் முதல் முயற்சியாக இம்மாநாடு திகழ்ந்தது. இதனைப் பெரியாரின் முதல் சமுதாய அரசியல் வெற்றி எனலாம்.

**சாதிய ஒடுக்குமுறை பற்றிய சிந்தனை**

தீண்டாமை ஒழிய வேண்டுமானால் தீண்டாமையைத் தோற்றுவித்தவருணாசிரம ஒழிய வேண்டும் எனப் பெரியார் விரும்பினார். சாதியின் அடையாளமாக விளங்குகிற பட்டங்களை விட்டுவிட வேண்டும் என்று கூறித் தம் பெரியாரின் பின்னால் இருந்த நாயக்கர் எனும் சாதிப்பெயரைவிட்டொழித்தார்.

கல்வி அறிவுடைய மனிதன் பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்துக் கொண்டால் மூடநம்பிக்கையும் அம்மூடநம்பிக்கையால் தோன்றுகிற சாதி வேற்றுமையும் ஒழியும் என்று பெரியார் கருதுகிறார் மக்கள் தங்களை இந்து மதத்தவராகக் கருதிக் கொண்டிருப்பதால் தீண்டாமைக்கு ஆட்பவேண்டியிருக்கிறது. ஆகவே மக்கள் இந்து என்னும் சமயக் கட்டுப்பாட்டினைத் தவிர்த்தால் மட்டுமே சாதியிலிருந்து விடுபட முடியும் என்பது அவரின் நம்பிக்கை.

கோயிலும் மதமும் சாதி உயர்வு தாழ்வினைப்பாதுகாக்கும் நிலையான அமைப்புகளாக விளங்குவனவாதலால் அவற்றை ஒழிப்பது தீண்டாமையை ஒழிப்பதாகும் என்று பெரியார் நம்பினார். புத்தருடைய கொள்கைகள் கடவுள் சமயம் புராணம் ஆண்மா ஆகியவற்றை ஒப்புக் கொள்வதில்லை, புத்தருடைய கருத்துக்களைத் தமிழ்நாட்டில் பரப்பினால் தீண்டாமைப்பேய் ஓடிவிடும் என்பதற்காகப்பெரியார் தொடர்ந்து புத்தருடைய கருத்துக்களைப் பரப்பிவந்தார்.

**கல்வி ஒடுக்கு முறை பற்றிய சிந்தனை**

உள்ளத்தின் சிறப்புத் தன்மைகளை வளர்த்தெடுப்பது கல்வி வெறும் கடந்த காலத்தையொட்டிய ஒன்றாக அமையாமல் நிகழ்காலத்தை உருவாக்கி வருங்காலத் தேவைக்கு நம்மைத் தயார்படுத்தும் வகையில் கல்வி அமைய வேண்டும் என்பர். இன்றையக் கல்வி முறை நேர்மாறாக அமைந்திருப்பதைப் பெரியார் சுட்டுகிறார். நம் நாட்டில் கல்வி இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டியது அவசியம். ஒன்று கல்வியால் மக்களுக்கு பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்படவேண்டும். மற்றொன்று மேன்மையான வாழ்வுக்குத் தொழில்.

செய்யவோ அலுவல்பார்க்கவோ பயன்பட வேண்டும் மேலும் கல்வியினுடையகுறிக்கோள் என்பது பணம் சம்பாதிப்பது மாத்திரம் என்று நிணைக்கக்கூடாது அறிவை வளர்க்க நமது இழிவையும் முட்டாள் தனத்தையும் முடநம்பிக்கை. களையும் ஒழிக்க என்பதாக இருக்கவேண்டும்.

பெரியார் அவர்கள் ஆழமாகச் சிந்தித்து. ஆய்வு செய்து ஒருதனி மனிதனுக்கு எதற்காகக் கல்விதேவை? ஏன் கல்வி தேவை? என்பதை வெகு சிறப்பாக வெளியிட்டுள்ளார்.

கல்வி என்பது ஒரு மனிதனுக்கு கற்பிக்கப்பட வேண்டியஅவசியமெல்லாம் ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு தகுதிப்படுத்துவது என்பதேயாகும். அல்லது உலகில் நல்வாழ்க்கை வாழ தகுதியுடையவனாக்குவது என்பதாகும். பெரியாரின் வரையறை. ஆனால் நடைமுறையில் கல்விஎன்பது கருத்துத்தினிப்பாகவே இருப்பதாகப் பெரியார் கருதுகிறார் .பொதுவாக எந்தத் தேசத்திலுமே மக்களுக்கு கல்வி கற்பிக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் .எல்லோரும் கல்வி போதிக்கும் விசயத்தில் ஒருவிதமான உள் கருத்தை வைத்துத்தான் அதைக்கல்வியின்மூலம் போதிக்கும் முயற்சியில் இருந்து வருகின்றார்கள். அந்த மாதிரியான உள்கருத்தைப் போதிப்பதில் கல்வியானது மக்களுக்கு அறிவுக்கும் வாழ்க்கையில் சுதந்திரமாய் வாழ்வதற்கும் பயன்படுகின்றது என்பதைவிட தங்கள் கொண்ட உள் என்னத்தையே மிக முக்கியமாக கருதுகின்றார்கள் என்பார் பெரியார்.

இதனை ஒரு எடுத்துக்காட்டோடு பெரியார் பின்வருமாறு விளக்கிறார். ஒரு தேசத்தார் தேசபக்திக்கு ஏற்ற கல்வி இருக்க வேண்டும் என்றும் கருதுகிறார்கள் மற்றொரு தேசத்தார் மத பக்திக்கான கல்வி வேண்டும் என்றும் மற்றொருவர் வீரம் ஏற்பட வேண்டும் என்று இன்னொருவர் அந்த நாட்டு பழமையான பழக்க வழக்கம் இருக்க வேண்டும் என்றும் மற்றும் சிலர் கடவுள் பக்தி புகட்டுவதற்கு அனுகூலமாய் இருக்க வேண்டும் என்றும் பார்க்கிறார்கள். இப்படியாகவே பல உட்கருத்துக்களை பிரமாதமாக கருதி கல்வி முறை ஏற்படுத்துவதில் கல்வியின் உண்மையான பிரயோசனம் ஏற்படாமலே மறைந்து போய்விடுகின்றது. மேலை நாட்டின் கல்வி பெரிதும் பகுத்தறிவையும் விஞ்ஞானத்தையும் ஆராய்ச்சியையும் பொறுத்து உள்ளது என்பதோடு அவைகளுக்கு அனுகூலமான கல்வியை அங்கு நடைபெறுகிறது. இந்தியாவின் கல்வி பகுத்தறிவை இலட்சியம் செய்வதில்லை.

**பெரியாரும் பொருளியலும் பற்றி சிந்தனை**

ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வாய்ப்புகளை இழந்த மக்களின் வாழ்வை உயர்த்தி அதில் இன்பம் சேர்க்க விளைந்த பெரியார். மனித வளத்தை மேம்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்தால் சமுதாய மாற்றமைப்பையும் அறிவு வளர்ச்சியையும் பண்பாட்டு புரட்சியையும் முதன்மைப் பணியாக மேற்கொண்டார். சமுதாயம் செம்மையுற்றதால் அதன் பின்பு அரசியல் பொருளாதார நிலைகளை

உயர்த்தி கொள்வது எளிது என்றும் அதுவே நிலையான முன்னேற்றமாக இருக்கும் என்று கருதினார். மேல் நாட்டுக்காரர்கள் தங்களுடைய அறிவைத் தினம் தினம் விருத்தி செய்து கொண்டே வருகிறார்கள். தங்கள் தொழில் முறையை தங்களாகவே மாற்றுகிறார்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு தங்களையே பொறுப்பாக்கி கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள் தலைவிதியையும் நல்ல காலத்தையும் எதிர்பார்த்து அவர்கள் சும்மா இருந்து விடுவதில்லை.

**பொதுவுடைமை பற்றிய சிந்தனை**

பொதுவுடைமை என்பது பற்றி தந்தை பெரியார் ரஷ்யா செல்வதற்கு முன் பேசியதாகவோ எழுதியதாகவோ குறிப்புகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. எனவே கிடைத்த செய்திகளின் அடிப்படையில் ரஷ்யா சென்று திரும்பிய பின்னர் தான் பொதுவுடைமை பற்றி பேசியும் எழுதியும் வந்துள்ளார் என்பது வெளிப்படை தந்தை பெரியார் ரஷ்யா சென்று திரும்பி பின்னர் 10.9.1983 நாளிட்ட குடியரசு தலையரங்கத்தில் பொதுவுடமைக் கொள்கையின் இலட்சியம் பற்றியும் அதனால் மனிதர்களிடம் ஏற்படும் மாறுதல் பற்றியும் தம் கருத்தினை வெளிப்படுத்திருப்பது குறிப்பிட்டத்தக்கது. அதாவது பொதுவுடமை கொள்கையின் கட்சி இலட்சியம். உலகம் பூராவும் ஒரு குடும்பம் உலக மக்கள் எல்லோரும் சகோதர்கள் உலகத்திலுள்ள செல்வம் இன்பம் போக போக்கியம் முதலியவை எல்லாம் அக்குடும்பச் சொத்தில் குடும்ப மக்கள் (உலக மக்கள்) எல்லோருக்கும் குடும்பச் சொத்தில் உலக சொத்தில் சரிபாகம் என்கிற கொள்கையாகும். ஆகவே பொதுவுடமை என்பது ஒரு கணக்குப் பிரச்சனை ஆகும்.

பொதுவுடமை தத்துவத்தினால் மனித ஜீவனுக்கு ஏற்பட போகும் முக்கியமான மாறுதலும் அணுகலும் என்னவென்றால் மனிதனுக்கு கவலை என்பது 100க்கும் 90 பாகத்துக்கு மேலாகவே குறைந்து போகும் இது தவிர அதிருப்தி பொறாமை என்று சொல்லும் படியான இயற்கைக் குணங்கள் என்பவைகள் எல்லாம் குறைந்துவிடும் என்கிறார். இக்கருத்துகள் அவர் ரஷ்யா சென்று திரும்பிய பின்னர் பொதுவுடமை கொள்கையை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையிலே வெளிப்பட்டுள்ளன என கொள்ளலாம். பத்தாண்டுகளுக்கு பின் குறிப்பாக 25.3.1944இல் குடி அரசு தலையங்கத்தில் மக்கள் முதலில் பெறவேண்டிய பொதுவுடமையா? பொது உரிமையா? என்ற கேள்வி எழுந்த நிலையில் தந்தை பெரியார் பொது உரிமையே முதலில் ஏற்பட வேண்டும் என்று தம் கருத்தினை பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார். பொதுவுடமை வேறு போது உரிமை வேறு பொது உடமை என்பது சம பங்கு என்பதாகும் பொது உரிமை என்பது சம அனுபவம் என்பதாகும் பொது உரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடமை மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம் போய்ச் சேர்ந்து கொண்டே இருக்கும் என்பது பொதுவுடமை தத்துவத்திற்கு பாலபாடம் என்பதை மக்கள் உணர வேண்டும்.

**தொழிலாளி முதலாளி பற்றி சிந்தனை.**

தந்தை பெரியார் ரஷ்யா சென்று திரும்பிய பின் தொழிலாளி முதலாளி பற்றிய அவர்தம் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது தொழிலாளிக்கும் முதலாளிக்கும் ஊடக அரசு என்பது எதற்காக உருவானது என்பது பற்றி ஏங்கெல்ஸ் குறிப்பிடும் போது சொத்து சேர்ப்பதற்கும் அதன் விளைவாய் மேலும் செல்வத்தை பொதுமக்கள் அங்கீகாரம் என்ற முத்திரையைப் பதிய வைப்பதற்கும். ஓர் அமைப்பு தேவைப்பட்டது உடைமையற்ற வர்க்கங்களை உடைமையுள்ளவர் சுரண்டுவதற்கும். அதன் ஆட்சியை நிரந்தரமாகி வைப்பதற்கும் ஒர் அமைப்பு தேவைப்பட்டது. அந்த அமைப்பு வந்து சேர்ந்தது அதுதான் அரசு இது சந்தடி இல்லாமல் தோன்றுவிட்டது என்கிறார். தந்தை பெரியார் ஒரு தேசம் தொழிலாளர்களின் தொழில் தான் அடங்கியுள்ளது இவர்களின் உழைப்பை பயன்படுத்தி கொள்ளும் முதலாளிகள் தம் நலன்களுக்கென அரசாங்கம் என்ற ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு தொழிலாளர்களை அடக்குகின்றனர் என்று தம் கருத்தினை 18.12.1932 நாளிட்ட குடியரசு தலையங்கத்தின் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு தொழிலாளி முதலாளிகளுக்கிடையில் அரசு என்பது முதலாளிகளைப் பாதுகாக்கவே உருவாக்குகிறது.எனும் கருத்தானது ஏங்கெல்ஸ் மற்றும் தந்தை பெரியாரிடமிருந்து ஒரே நிலையில் வெளிப்பட்டுள்ளது தந்தை பெரியாரின் இவ்விதமான வெளிப்பாட்டிற்கு அவர் தம் ரஷ்யப் பயணமே முக்கிய காரணமாகும்.

**ஏழை பணக்காரன் பற்றிய சிந்தனை**

தந்தை பெரியாரிடம் ஏழை பணக்காரன் பற்றிய சிந்தனை ரஷ்யா செல்வதற்கு முன் இருந்ததாக் குறிப்புகள் எதுவும் கிடைக்கப்பெற வில்லை. தந்தை பெரியார் ரஷ்யா சென்று திரும்பி வரும் வழியில் 19.32 அக்டோபரில் இலங்கையில் ஆற்றிய பேருறையில் அரசனது செல்வந்தர்களுக்கு ஆதரவான நிலையிலேயே செயல்படுகிறது என்று தம் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். அதாவது உலகிற்கு அரசன் அரசாட்சி என்பதாக ஒருவகை இருந்து வருவதன் காரணமெல்லாம் கூடசெல்வவான்களின் செல்வாங்களைக் காப்பாற்றவும் சோம்பேறி வாழ்க்கையையும் அவர்களது தத்துவங்களையும் பிறர் இழக்காமல் இருக்கவுமே ஒழிய மற்ற படி மக்கள் சமுகம் துன்படுத்தப்படாமலோ சகல துறைகளிலும் உயர்வு தாழ்வுக் கொடுமை இல்லாமலோ இருப்பதாக அல்லவே அல்ல என்பதை நீங்கள் உறுதியாய் நம்புங்கள் என்று பேசியுள்ளார். அதாவது உலக அளவில் “அரசு” என்பது உருவாகியிருப்பது பணக்காரர்களின் செல்வத்தையும் தத்துவத்தினையும் பாதுகாக்கவே ஒழிய ஏழைகளின் துயரங்களைப் போக்குவதற்கு என்று உருவாகவில்லை என்ற தெளிவான பார்வையைத் தந்தை பெரியாருக்கு ரஷ்ய பயணமே தந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

தமிழ்ச் சமுதாயத்திற்கு பகுத்தறிவு சிந்தனையை பெரிதும் பேசப்பெற்று வருகிறது. அதற்கு மூலகாரணமாக இருந்து அடித்தளம் அமைத்து பெரியார் சமூக தொண்டின் மூலம் பகுத்தறிவு சிந்தனையை வெளிப்படுத்தியவர் மக்களை அடிமைத்தனத்தில் இருந்து பகுத்தறிவள் சிந்திக்க வைத்து விழிப்படைய செய்வதில் பெருமைக் கண்டார் பகுத்தறிவு விளக்கம் காலந்தோறும் வெளிவந்துள்ள இலக்கியங்களில் பகுத்தறிவு சிந்தனை எவ்வாறு இருந்தது பெரியாருக்கு முன்பு இருந்த சான்றோர்களின் பகுத்தறிவு சிந்தனையை மக்களை அடிமைத் தனத்தில் இருந்து பகுத்தறிவாள் சிந்திக்க வைத்து விழிப்படைய செய்வதில் பெருமைக் கண்டார். காலந்தோறும் வெளிவந்துள்ள இலக்கியங்களில் பகுத்தறிவு சிந்தனை எவ்வாறு இருந்தது பெரியாருக்கு முன்பு இருந்த சான்றோர்களின் பகுத்தறிவு சிந்தனை மற்றவர்களுடைய சிந்தனையிலிருந்து எவ்வாறு தனித்துவம் சுயமரியாதை மாநாட்டு தீர்மானங்கள் பற்றிய சிந்தனை சாதிய ஒடுக்குமுறை பற்றிய சிந்தனை கல்வி ஒடுக்குமுறை பற்றிய சிந்தனை பெரியாரும் பொருளியலும் பற்றிய சிந்தனை பொதுவுடைமை பற்றிய சிந்தனைகள் தொழிலாளி முதலாளி பற்றிய சிந்தனை ஏழை பணக்காரன் பற்றிய சிந்தனை போன்ற கருத்துக்களைப் தந்தை பெரியார் பேசியும் எழுதியும் வந்துள்ளார் என்பது தெரியவருகிறது. ஆக தந்தை பெரியார் மேற்கொண்ட பயனம் அவர்தம் பகுத்தறிவுச் சிந்தனையில் தூண்டுதலை ஏற்படுத்தியதால் தான் பெரும்பான்மையான பொதுவுடைமை சார்ந்த கருத்தக்களை பகுத்தறிவுச் சிந்தனையாளர் வெளிப்படுத்தியுள்ளார் என்பது இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்பு**

[1]. புறநானூறு, பாடல் 192, பக்கம் 145.
[2]. திருக்குறள், குறள் 467, பக்கம் 102.
[3]. பெரியார் உரைகள் தொகுதி 2, பக்கம் 78
[4]. க.நெடுஞ்செழியன், இரா.சக்குபாய், சமூகநீதி, ப.232,
[5]. வெ.ஆனைமுத்து (ப.ஆ) பெரியார், ஈ.வெ.ரா.சிந்தனைகள், ப.9.
[6]. மேலது, ப.56
[7]. லெஷ்மி, எஸ், கல்வியில் புதுமைகள், பக்.127.
[8]. பெரியார், குடியரசு (27-09-1931) ப.3.
[9]. பெரியார், விடுதலை (தலையங்கம். 30-12-1953.
[10]. வே.ஆனைமுத்து, பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள், பக்1707-1709.
[11]. தந்தைபெரியார் சமதர்மம் அமைப்போம், பக்.85-87.
[12]. ஐமாயாண்டி பாரதி, அரசு என்றால் என்ன. ப.26.
[13]. கோ.கேசவன், சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும், ப.186.
[14]. தந்தை பெரியார் தந்தை பெரியாரின் இலங்கைப் பேருரை, ப.7.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026 